OS.No. : 60/2023

நாள் :19.11.2024

வா.சா. : 1

பெயர் : ரதிப்பிரியா

**3, 4 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

என் கணவர் பெயர் வெங்கட்ரங்கன் என்ற ஹரிஷ் அவருக்கு நான் மற்றும் என் மகன் ஹரிநாராயணன், என் மகள் ஹரிதா ஆகியோர் வாரிசுகள். என் நாத்தனார் வித்யாவும் என் கணவரின் வாரிசு தான் என்றால் தவறு. ஹரிநாராயணன், ஹரிதா ஆகியோரை இந்த வழக்கில் வாதிகளாக சேர்க்கவில்லை என்றால் சரி. 1ம் பிரதிவாதி ரமாமணி எந்த தேதியில் தன்னுடைய பாக உரிமையை தன் மகள் 2ம் பிரதிவாதிக்கு செட்டில்மெண்ட் ஆவணமாக எழுதி வைத்தார் என்று தெரியுமா என்றால் தெரியும். 22.05.2023 என்று நினைக்கிறேன். தேதி சரியாக நினைவில்லை. அந்த ஆவணம் குத்தாலம் சார்பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எண். 1239/2023 என்று 23.05.2023 ல் பதிவாகியுள்ளது என்றால் தெரியவில்லை. இரண்டு document எழுதி வைத்துள்ளார். 2ம் பிரதிவாதி அந்த ஆவணத்தின் அடிப்படையில் கிடைத்த அனைத்து சொத்துக்களையும் 20.06.2023 ல் கிரய பத்திரம் மூலம் 3, 4 பிரதிவாதிகளுக்கு கிரயம் செய்து கொடுத்துள்ளார் என்றால் சரி. நான் தாக்கல் செய்துள்ள வழக்குரை சொத்து விவரத்தில் மொத்தம் 138 ஐட்ட சொத்துக்கள் காட்டப்பட்டுள்ளது என்றால் சரி. அந்த 138 ஐட்ட சொத்துக்களில் ஒரு 60, 70 சொத்துக்கள் விற்பனை செய்யப்பட்டுவிட்டது. அந்த சொத்துக்களை வாங்கிய நபர்கள் அனைவரையும் பிரதிவாதிகளாக சேர்க்கவில்லை என்றாலும் 3, 4 பிரதிவாதிகளை மட்டுமே சேர்த்துள்ளேன் என்றால் சரி. 3, 4 பிரதிவாதிகள் 2ம் பிரதிவாதியிடமிருந்து சொத்தை கிரயம் பெற்ற பிறகு அந்த சொத்தின் சுவாதினத்தை அடைந்து விட்டார்கள் என்றால் சரி. அந்த சொத்து உள்ள கிராமத்தை விட்டு விட்டு புதுச்சேரியில் வசித்து வருகிறேன் என்றால் சரி. 1ம் பிரதிவாதிக்கு சொந்தமான சொத்தை 2ம் பிரதிவாதிக்கு செட்டில்மெண்ட் எழுதி வைத்துள்ளார்என்றாலும் அந்த சொத்தை 3, 4 பிரதிவாதிகளுக்கு கிரயம் செய்ய 2ம் பிரதிவாதிக்கு உரிமை உள்ளது என்றால் சரியல்ல. அது பொது குடும்ப சொத்து அதில் என் நாத்தனாருக்கு எந்த உரிமையும் இல்லை.

என் மாமியாரான 1ம் பிரதிவாதிக்கு என் கணவர் வாரிசு என்றால் சரி. அதுபோல் 2ம் பிரதிவாதியும் 1 ம் பிரதிவாதியின் வாரிசு என்றால் சரி. கூட்டு குடும்ப பாகஸ்தர்களை வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரி. என் மகனையும் மகளையும் சேர்க்கவில்லை. அவர்களை தவிர மற்ற பாகஸ்தர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர். என் குடும்பத்தில் உள்ள நபர்களை தரப்பினராக சேர்க்கவில்லை என்றாலும் பட்டா செட்டில்மெண்ட் பத்திரம், வில்லங்கம் மற்றும் இதர ஆவணங்களை சரிபார்த்து சொத்தை கிரயம் பெற்ற 3, 4 பிரதிவாதிகளை தரப்பினராக சேர்த்துள்ளேன் என்றாலும் இவ்வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

1ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணைக்காகவும் 5 முதல் 11 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணைக்காகவும் இவ்வழக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.